செ.வெ.எண்:12 நாள்:02.11.2021

**கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்ட அரங்கில் இன்று (02.11.2021) பள்ளி கல்வித்துறை சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இல்லம் தேடி கல்வி திட்டம் தொடர்பான மாவட்ட அளவிலான முதற் கட்ட பயிற்சி வகுப்பை துவக்கி வைத்தார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்ட அரங்கில் இன்று (02.11.2021) பள்ளி கல்வித்துறை சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இல்லம் தேடி கல்வி திட்டம் தொடர்பான மாவட்ட அளவிலான முதற் கட்ட பயிற்சி வகுப்பை துவக்கி வைத்து, கலந்து கொண்டவர்களுக்கு கற்றல், கற்பித்தல் குறித்த பயிற்சி கையேட்டினை வெளியிட்டார்.

தொடர்ந்து, இல்லம் தேடி கல்வி திட்டம் தொடர்பாக கலைக் குழு கலைஞர்களின் கரகாட்டம் மற்றும் நாடகம் வாயிலாக விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றது.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, பள்ளிக் கல்வித் துறையின் கீழ் "கொரோனா பெருந்தொற்றுப் பொது முடக்க காலங்களில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற மாணவர்களின் கற்றல் இடைவெளி / இழப்புகளைக் குறைத்திடும் வகையில் **"இல்லம் தேடிக் கல்வி"** என்கிற திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு மாவட்டத்தில் பல்வேறு வகையில் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சியில் மாநில ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் குழு உறுப்பினர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், கல்வி மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்தும் மூன்று ஆசிரியர் பயிற்றுநர்கள் என 65 பேர் கலந்துக்கொண்டனர்.

இப்பயிற்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.கா.பெ.மகேஸ்வரி மாவட்டக் கல்வி மற்றும் ஆராய்ச்சி பயிற்சி நிறுவன முதலவர் திரு.ஸ்ரீனிவாசன், மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர் திரு.தே.சு.நாராயணா மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், வட்டார கல்வி அலுவலர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**